அழுது அழுது விழிகள் கரைய தீர்ந்திடுமோ வேதனை
அருகில் அணைத்து சிரித்து கதைக்கும் ஆருயிரே போயினை
அழகான புன்னகை கொலுவிருக்கும் தமிழ்ச்செல்வன் அண்ணாவின் முகம் சிலிர்க்கும்
அதைப்பார்த்தால் எமக்கெல்லாம் துயர் பறக்கும்
ஐயோ இனி என் செய்வோம் மனம் சகிக்கும்
தலைவனின் உயிரினில் தாங்கிய காற்றே
தலைவனின் உணர்வுடன் கலந்துவிட்டாயே

அழுது அழுது விழிகள் கரைய தீர்ந்திடுமோ வேதனை
அருகில் அணைத்து சிரித்து கதைக்கும் ஆருயிரே போயினை

உலகம் முழுவதின் திசை பறந்து தமிழ் உரிமையை உணர்த்திய உன்னதமே
உலகின் விழிகளை வசிகரித்து எங்கள் விடுதலை விளக்கிய மன்னவனே
ஓச்சல் இன்றி உழைத்தவன் நீ களைத்த போதும் சிரிப்பவன் நீ
தாய் தலைவன் நினைப்பவற்றை உடன் செயலாய் முடிப்பவன் நீ
இது நாள் வரையும் இயங்கியவனாய் எம்மை பிரிந்தனையா

அழுது அழுது விழிகள் கரைய தீர்ந்திடுமோ வேதனை
அருகில் அணைத்து சிரித்து கதைக்கும் ஆருயிரே போயினை

தமிழர் மனங்களில் எப்பொழுதும் நீயே தனித்தொரு இடத்தை பிடித்திருந்தாய்
தமிழர் இலட்ச்சிய விடுதலைக்காய் நீயே தளத்திலும் களத்திலும் உழைத்திருந்தாய்
பேச்சு வார்த்தை மேசைகளில் சாட்சியென நீ இருந்தாய் நீத்துவிடும் பொறிகளுக்குள்
நெருப்பனவே தவம் புரிந்தாய் தலைவன் அருகே தினம் இருக்கும் எங்கள் தமிழே போயினையோ

அழுது அழுது விழிகள் கரைய தீர்ந்திடுமோ வேதனை
அருகில் அணைத்து சிரித்து கதைக்கும் ஆருயிரே போயினை
அழகான புன்னகை கொலுவிருக்கும் தமிழ்ச்செல்வன் அண்ணாவின் முகம் சிலிர்க்கும்
அதைப்பார்த்தால் எமக்கெல்லாம் துயர் பறக்கும்
ஐயோ இனி என் செய்வோம் மனம் சகிக்கும்
தலைவனின் உயிரினில் தாங்கிய காற்றே
தலைவனின் உணர்வுடன் கலந்துவிட்டாயே

அழுது அழுது விழிகள் கரைய தீர்ந்திடுமோ வேதனை
அருகில் அணைத்து சிரித்து கதைக்கும் ஆருயிரே போயினை